# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் அவசரக் கூட்டம் 2022–ம் வருடம் டிசம்பர் மாதம் 08–ம் தேதி வியாழக் கிழமை மாலை 3.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## பொருட்கள்

## நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் மொழியும் தீர்மானம்

பத்மனாபபுரம் நகராட்சியில் குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது தொடர்பாக பொது மக்களிடமிருந்து பல்வேறு புகார்கள் வந்த நிலையில் நிர்ணயம் செய்த குடிநீர் கட்டணம் தொடர்பாக விவாதித்தல்

**மன்றத் தீர்மானம் எண். 136**

01/04/2022 முதல் உயர்த்தப்பட்ட கட்டணம் தொடர்பாக கீழ்க்கண்டவாறு விவாதிக்கப்பட்டது.

கட்டடத்தின் பரப்பளவிற்கேற்ப குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை உயர்த்தப்பட்டுள்ளதன் காரணமாக பொது மக்களிடையே அதிருப்தி நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே கட்டத்தின் பரப்பளவை கருத்தில் கொள்ளாமல் பொது மக்களின் நலன் கருதி கீழ்க்கண்டவாறு குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை குறைவு செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களை கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

| கட்டடத்தின் பரப்பளவு | ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வைப்புத் தொகை | | கட்டடத்தின் பரப்பளவு | திருத்தியமைக்க வேண்டிய வைப்புத் தொகை | |
|---|---|---|---|---|---|
| | வீட்டு உபயோகம் | இதர உபயோகம் | | வீட்டு உபயோகம் | இதர உபயோகம் |
| 500 | 5000 | 10000 | 500–1200 | 5000 | 10000 |
| 501–1200 | 7500 | 15000 | 1201 முதல் 2401 மேல் | 7500 | 15000 |
| 1201-2400 | 10000 | 20000 | | | |
| 2401 and above | 15000 | 30000 | | | |

## மாதாந்திர குடிநீர் கட்டணம்

| கட்டடத்தின் பரப்பளவு | தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள குடிநீர் கட்டணம் | | திருத்தியமைக்க வேண்டிய குடிநீர் கட்டணம் | |
|---|---|---|---|---|
| | வீட்டு உபயோகம் | இதர உபயோகம் | வீட்டு உபயோகம் | இதர உபயோகம் |
| 500 | 120 | 240 | பரப்பளவிற்கு ஏற்றவாறு இல்லாமல் அனைத்து குடியிருப்பு/கட்டடங்களுக்கும் குறைந்த பட்ச மாதாந்திர கட்டணம் ரூ. 150/– | 350/– |
| 501–1200 | 160 | 320 | | |
| 1201-2400 | 200 | 400 | | |
| 2401 and above | 240 | 480 | | |

ஒப்பம்/–

நகர்மன்ற தலைவர்

பத்மனாபபுரம் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்,

பத்மனாபபுரம் நகராட்சி.